மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறையிலும், மதுரை மாவட்டத்தில் மங்களம்கொம்பு என்ற இடத்திலும், திருச்சி மாவட்டத்தில் உய்யக்கொண்டான், திருமலைக்கிராமத்திலும், வடஆற்காடு மாவட்டத்தில் வடவிரிஞ்சிபுரத்திலும் ஆராய்ச்சிக்காக நான்கு பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

(இ) குட்டைப்பச்சை வாழை, பெரிய பஞ்சை வாழை, ரோபஸ்டா, லெகாடன் முதலிய வாழை ரகத்தில், வடஆற்காடு வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப்படும். மேலும், மற்ற நவீன புகழ்பெற்ற, வணிக வாழைகளான வாலரி, போயோ, 81-86 ஆகிய ரகங்களை வெளிநாட்டிலிருந்து பெற்று இந்நிலையத்தில் ஆராய்ச்சிக்காக பயிர் செய்யப் படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, வத்தலகுண்டில் இருக்கும் ஆராய்ச்சி நிலையத்தில் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள்? அதற்கு பயன்படும் நிலப்பரப்பு எவ்வளவு? அதை விஸ்தரிக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவரவர்களே, மங்களம்கொம்பு என்னும் ஊரில் 30 ஏக்கர் பரப்பில் இவ்வுப ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. வத்தலகுண்டில் அல்ல. பழனி அடிவாரத்தில் இருக்கும் மங்களம்கொம்பு என்று சொன்னேன். இவ்வாராய்ச்சி நிலையத்தில் வாழையின் வகைகள், அவற்றின் குணங்கள், சத்துமிக்க மலைவாழை வகைகள் ஆகியவை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இத்துடன் வாழையின் பொருளாதார முக்கியத்துவம், மண்வளத்தைப் பெருக்க பசுந்தாள் உரங்களை வாழையின் ஊடுபயிராக பயிரிடுதல், மண்ணின் சாந்தன்மையைப் பாமரித்தல், மலை வாழைக்கு ஏற்ற கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள், வாழையில் தோன்றும் முக்கிய பூச்சி நோய்கள் பற்றியும் ஆராயப்படும்.

எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் என்பதற்கு குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

கல்பாக்கம் அணுமின் நிலையம்

* 203 வினா—திரு. சு. **துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் அணுமின் நிலைய மின்சாரம் முழுவதும் தமிழ்நாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறதா?

(இ) இல்லை எனில், என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : துணைத் தலைவரவர்களே, அதற்கான கடிதப்போக்குவரத்து மத்திய அரசுடன் நடந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி : துணைத்தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்குத் தேவை யான மின்சாரம் இப்போது இல்லாமல், அண்டை மாநிலமான மைசூரிலிருந்து நாம் பெற்று வருகிறோம். மைசூரில் இருக்கும் மின்சாரத்தை மகாராஷ்டிரத் திற்கு கொடுக்கப்போவதாகப் பார்த்தேன். ஆகவே, கல்பாக்கத்தில் உற்பத்தி யாகும் அணுமின்சாரம் முழுவதையுமே தமிழ்நாட்டிற்குக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தை மாநில அரசு வற்புறுத்துமா?

TRUTH ALONE TRIUMPHS

1972 சனவரி 31]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதற்காக முடிவு எடுப்பதற்காகத் தான் மத்திய அரசுடன் கடிதப்போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கல்பாக்கத்தில் மின்சார உற்பத்தி எப்போது துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 1975-ல் முதல் கட்ட வேலை முடியும். செகண்ட் யூனிட் 76-ல் முடியும் என்று குறிப்பு இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தக் கல்பாக்கம் அணு மின்சக்தி தொழிற்சாலை தன்னுடைய பணியைத் துவக்குவதன் மூலமாக பல பேர்களுக்கு, சுமார் 100 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, ஏற்கெனவே காலதாமதமாகி இருக்கிற காரணத்தால், அதை விரைவாக துவக்க—இந்த வேலைவாய்ப்பு நிலைமையை எண்ணிப் பார்த்தாவது —அரசாங்கம் முன் வருமா? அதிலே தலைமை அணு மின் சக்தி நிலையம் என்ன ஏற்பாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? ஏனென்றால் பாம்பே நிறுவனத்தினர் இதற்கான காரணம் தங்களால் இல்லை என்று சொல்லியிருக்கிறபோது, இது தாமதப் படுவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தாமதம் என்பது அல்ல. அது முடிய திட்டமிட்டதற்கு மேல் ஒரு ஆண்டு ஆகும் என்று சொல்கிறார்கள். இப்போது வேலை நடந்து வருகிறது.

விவசாய பாசனத்திற்கு மின் விசை

* 204 வினு—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை ஜில்லாவில் விவசாய பாசனத்திற்கு மின்விசை கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுவது உண்மையா?

(இ) காலதாமதமின்றி மின்விசை கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) குறிப்பான நேர்வு எதுவும் அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, திருச்செந்தூர் பகுதியில் இப்போது மின் இணைப்பு கொடுப்பது கொஞ்சமாக இருப்பதால், அதை அதிகரிக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 60,000 கிணறுகளுக்கு மின்இணைப்பு கொடுப்பது என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அதிலே அந்த வட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவுதான் கொடுக்க முடியும்.